People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

மார்ச் 25, 2010

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை 600 009

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 14 ஆண்டுகளாக, தமிழக அளவிலும் 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும் மனித உரிமை காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்தும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 07.3.2010 முதல் 13.3.2010 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சிறைக் கைதி மரணம்/வன்முறை | 2 |
| 2. | பெண்கள் மீதான வன்முறை | 70 |
| 3. | காவல் நிலையச் சித்திரவதை | 12 |
| 4. | வகுப்பறை வன்முறை | 8 |
| 5. | தலித்துகள் மீதான வன்முறை | 4 |
| 6. | அரசு அதிகாரிகள்/காவல் துறையினர் லஞ்சம் பெற்றது | 6 |
| 7. | மருத்துவர்கள் அலட்சியம் | 3 |
| 8. | குழந்தைத் திருமணம் | 1 |
| 9. | குழந்தைத் தொழிலாளர் மீட்பு/வன்மறை | 9 |
| 10. | ரேசன் அரிசி கடத்தல் | 8 |

மக்கள் கண்காணிப்பகம்

| | | |
|---|---|---|
| 11. | மணல் கொள்ளை | 3 |
| 12. | பொதுவானவை | 5 |
| | | 131 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இத்துடன் சம்பவச் சுருக்கத்தையும் இணைத்துள்ளோம். மேலும் இத்துடன் தஞ்சாவூரில் குழந்தைகள் மீது காவல் துறை நடத்திய சித்திரவதை சம்பவம் ஒன்றையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

## *தஞ்சைக் காவல் துறையினரால் சிறுவர்கள் சித்திரவதை*

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சை நகரத்தில் உள்ள ஆயுதப்படை மைதானத்தை ஒட்டி இந்திரா நகர் உள்ளது. இதில் பல்வேறு குடும்பங்கள் பல ஆண்டு காலமாக வாழ்ந்து வருகின்றனர். தஞ்சாவூரில் DIG ஆகப் பணியாற்றி, தற்போது உயர் பதவியில் சென்னையில் பணியாற்றி வரும் காவல் துறை உயர் அதிகாரி திரு அபாய்குமார் சிங்கின் மனைவி திருமதி புஷ்மா ரஞ்சன் 19.02.2010 அன்று மாலை 5.00 மணியளவில் வாக்கிங் சென்றுகொண்டிருந்தபோது ஜோசப் ராஜ் என்பவரின் வீட்டு மாடியில் 8 வயது நிரம்பிய சிவகணேஷ், தந்தை பெயர் லோகேஷ் பாபு, 12 வயது நிரம்பிய ஸ்ரீதர், தந்தை பெயர் இராமச்சந்திரன், மோகன், தந்தை பெயர் தேவேந்திரன், வெங்கடேஷ் ஆகிய சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

சிறுவன் சிவகணேஷ் தன்னுடன் விளையாடிக்கொண்டிருந்த ஸ்ரீதர் மீது ஒரு சிறிய கல்லைத் தூக்கிப் போட, அக்கல் வாக்கிங் சென்றுகொண்டிருந்த திருமதி புஷ்மா ரஞ்சன் அவர்கள் அருகில் தரையில் விழுந்துள்ளது. இதனால் கோபப்பட்ட திருமதி புஷ்மா ரஞ்சன் அவருக்குப் பாதுகாப்பிற்கு இருந்த ஆயுதப் படைப்பிரிவு இன்ஸ்பெக்டரிடம் புகார் செய்துள்ளார். உடனடியாக ஆயுதப்படை ஆய்வாளர் முருகேசன், ஆயுதப்படையின் இரு காவலர்கள் ஆகியோர் விளையாடிக்கொண்டிருந்து 4 சிறுவர்களையும் அருகில் உள்ள மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தரதரவென சட்டையைப் பிடித்து இழுத்துச்சென்றுள்ளனர். மாலை 5.00 மணியிலிருந்து இரவு சுமார் 7.00 மணி வரை SP அலுவலத்திலேயே அடைத்து வைத்திருந்தனர். சிறுவர்களைப் பார்க்க இச்சிறுவர்களுடைய பெற்றோர்களைக்கூட அனுமதிக்கவில்லை. இந்நிலையில் ஸ்ரீதர் என்ற சிறுவனின் கை விரல்களை முறுக்கி அவனையும் மற்ற சிறுவர்களையும் மிரட்டி சித்திரவதை செய்துள்ளனர்.

இரவு சுமார் 7.00 மணிக்கு தஞ்சை மேற்குக் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சந்தியாகு, ஜீப் டிரைவர் மனோகர், ஆயுதப்படை ஆய்வாளர் முருகேசன் ஆகியோர் அச்சிறுவர்களைக் காவல் துறை ஜீப்பின் உள்ளே தூக்கிப் போட்டு மேற்குக் காவல் நிலையம் அழைத்துச் சென்றுள்ளனர். மேற்குக் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் சந்தியாகு, சார்பு ஆய்வாளர் வீரம்மாள் ஆகியோர் மேற்கண்ட 4 சிறுவர்களையும் அங்குள்ள இருட்டு அறையில் அடைத்து வைத்துள்ளனர். அதன்

பின்னர் அந்த 4 சிறுவர்களின் மேற்சட்டையை கழற்றச் சொல்லி மிரட்டியுள்ளனர். அவர்களின் உடம்பில் உள்ள அங்க மச்ச அடையாளங்களைக் குறித்து, வீட்டு முகவரிகளையும் கேட்டு வாங்கி அதன் பிறகு அந்த இளம் சிறார்களிடம் கையெழுத்து வாங்கியுள்ளனர். இரவு சுமார் 11.00 மணி வரை அந்த இளம் சிறார்களைச் சித்திரவதை செய்துள்ளனர்.

இது சம்மந்தமாக சிவ கணேசனின் தாயார் காமிலா அவர்கள் உயர் அதிகாரிகளுக்குப் புகார்கள் அனுப்பியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஒன்றுமறியாத இளம் சிறுவர்களை தஞ்சை மேற்குக் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சந்தியாகு, சார்பு ஆய்வாளர் வீரம்மாள், ஜீப் டிரைவர் மனோகர் ஆயுதப்படை ஆய்வாளர் முருகேசன் ஆகியோர் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று சித்திரவதை செய்தனர் என்பது எங்களது கள ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. மேலும் காவல் துறை உயர் அதிகாரி திரு அபாய்குமார் சிங்கின் மனைவி திருமதி புஷ்மா ரஞ்சன் தன் கணவரின் பதவியைப் பயன்படுத்தி காவல் துறையைத் துஷ் பிரயோகம் செய்துள்ளார் என்பதும் எங்கள் கள ஆய்வின் மூலம் தெரிய வருகிறது.

எனவே, இச்சம்பவம் அடிப்படையில் காவல் துறை உயர் அதிகாரி திரு அபாய்குமார் சிங்கின் மனைவி திருமதி புஷ்மா ரஞ்சனின் மீதும் சட்ட ரீதியாக வழக்குப் பதிவு செய்யவும், அப்பாவிச் சிறுவர்களைச் சித்திரவதை செய்த தஞ்சை மேற்குக் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சந்தியாகு, சார்பு ஆய்வாளர் வீரம்மாள், ஜீப் டிரைவர் மனோகர் ஆயுதப்படை ஆய்வாளர் முருகேசன் ஆகியோர் மீதும் சட்ட மற்றும் துறை வாரியான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

இதுபோன்ற குழந்தைகள் மீதான சித்திரவதைகளும், காவல் நிலையச் சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:
தமிழகத் துணை முதல்வர்
தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்
தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்
அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்
அனைத்து மனித உரிமை ஆணையங்கள்
அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
## 07.03.2010 முதல் 13.03.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 678. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை பெரம்பூர் மங்கலபுரம் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் 3–ம் வகுப்பு படிக்கும் மாணவி மதுமிதா(8). ஆசிரியை ரேணுகாபரமேசுவரி அடித்ததில் ஆசிரியியையின் வளையல் குத்தியதில் மதுமிதா கண்ணில் காயம். | வகுப்பறை வன்முறை | அறிவு (1–2–10) தமிழ்ஓசை |
| 679. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** நீலாங்கரை அருகே உள்ள வெட்டுவாங்கேணி பகுதியில் தங்கி செம்மஞ்சேரியில் என்ஜினீயரிங் 4ஆண்டு படிக்கும் மாணவன் விகாஸ்சிங்(24). உடன்படிக்கும் சீனியர் மாணவர் சஞ்சீவி கடத்தி சென்று தாக்கியதாக பெற்றோர் புகார். | மாணவர்கள் மீதான வன்முறை | அறிவு (3–2–10) தினகரன் |
| 680. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** காரிமங்கலம் அடுத்து பெரியமுரசுப்பட்டி எம்.ஜி.ஆர் நகரைச் சேர்ந்த முனுசாமி(27) மொபட்டுக்கு பெட்ரோல் போட அய்யூர் சென்று திரும்பும் போது ஊமையன் என்ற ஊனமுற்ற வாலிபர் மீது மோதிய சம்பவத்தில் போலீசார் விசாரணைக்கு அழைத்துள்ளனர். போலீஸ் விசாரணைக்கு பயந்து முனுசாமி தூக்கு போட்டு தற்கொலை. | காவல் நிலைய வன்முறை | செந்தில்ராஜா (8–2–10) தினத்தந்தி |
| 681. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னையை அடுத்த செங்குன்றம் அண்ணா தெருவைச் சேர்ந்த ஜெய்கணேஷ் மனைவி ஜெயலட்சுமி(21). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் ஜெயலட்சுமி தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | அறிவு (9.2.10) தினத்தந்தி |
| 682. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** சென்னையை அடுத்த கொட்டிவாக்கம் ஏ.ஜி.எஸ். காலனியைச் சேர்ந்த அரசி. 4 வாலிபர்கள் அரசியைக் கேலி செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (10–2–10) தினத்தந்தி |
| 683. | 7.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ராயக்கோட்டை அடுத்த சிங்காரப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த சென்றாயன்(27) | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (10–2–10) தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனைவி சுலோச்சனா(21). 5 மாத கர்ப்பினியான சுலோச்சனாவை மாமியார் மானார், இருவரும் சேர்ந்து அடித்துக் கொலை. | | |
| 684. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** தொப்பூரை அடுத்த பூலாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் மனைவி சங்கீதா(21). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தி சங்கீதா கொலை. சங்கீதாவின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | செந்தில்ராஜா (11–2–10) தினத்தந்தி |
| 685. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி–சேலம் மெயின் ரோட்டில் போலீசார் வாகன சோதனையின் போது பெங்களூருக்கு லாரியில் கடத்த முயன்ற 350 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | செந்தில்ராஜா (11–2–10) தினத்தந்தி |
| 686. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** மொரப்பூர் அருகேயுள்ள கல்லடிப்பட்டியைச் சேர்ந்த ராமலிங்கம் மனைவி உமா(30). மருத்துவமனைக்கு சென்ற உமா வீடு திரும்ப வில்லை என ராமலிங்கம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (11–2–10) தினகரன் |
| 687. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** ஊத்தங்கரை பகுதியில் அடிக்கடி மணல் கொள்ளை நடப்பதாக கிடைத்த தகவலின்படி அதிகாரிகள் வாகன சோதனை. அனுமதி இல்லாமல் தென்பெண்ணை ஆற்றில் இருந்து மணல் ஏற்றி வந்த 3 டிராக்டர் பறிமுதல். | மணல் கொள்ளை | செந்தில்ராஜா (11–2–10) தினத்தந்தி |
| 688. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** காரியமங்கலம் அருகே உள்ள காட்டுசீகலஅள்ளி பகுதியைச் சேர்ந்த துரை மகன் ராஜி(23). காரியமங்கலம் தோட்டத்தில் தனியாக மாடு மேய்த்து கொண்டிருந்த பெண்ணை பாலியல் பாலாத்காரம் செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (12–2–10) தினத்தந்தி |
| 689. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** நிம்மாங்கரையைச் சேர்ந்த தீர்த்தகிரி. தனது நிலத்துக்கு பட்டா வேண்டி பாலக்கோடு தாலுகா அலுவலகம் வி.ஏ.ஓ., முனிராஜிடம் அணுகினார் அவர் ரூ. 2,500 லஞ்சம் கேட்டதாக தீர்த்தகிரி புகார். | லஞ்சம் | செந்தில்ராஜா (12–2–10) தினத்தந்தி |
| 690. | 7.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** மேலேறிக்கொட்டாய் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் மதியம் சத்துணவை சாப்பிட்ட 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் வாந்தி மயக்கம். | வகுப்பறை வன்முறை | செந்தில்ராஜா (10–2–10) தினத்தந்தி |
| 691. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு | பெண்கள் மீதான | செந்தில்ராஜா |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருகே உள்ள திருமல்லாடியைச் சேர்ந்த மாதேஸ்(38) மனைவி மாரி(35). கணவன் மனைவி தகராறில் மனமுடைந்த மாதேஸ் தீக்குளித்துத் தற்கொலை. | வன்முறை & தற்கொலை | (12–2–10) தினத்தந்தி |
| 692. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** அரூர் மேல் பாட்ஷாபேட்டையில் லட்சுமி என்பவர் வீட்டில் 20 மூடைகளில் பதுக்கி வைத்திருந்த 1,000 கிலோ ரேஷன் அரிசியை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். | ரேசன் அரிசி கடத்தல் | செந்தில்ராஜா (12–2–10) தினத்தந்தி |
| 693. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** அரூர் அடுத்த ஹெச். ஈச்சம்பாடியைச் சேர்ந்த பழனி மனைவி ராமி. ரேசன் மண்ணெண்ணெய் பதுக்கி வைத்து விற்பனை செய்வதாக அதிகாரிகளுக்கு தகவல். சோதனையின் போது 50 லிட்டர் ரேஷன் மண்ணெண்ணெய் பறிமுதல். | ரேசன் மண்ணெண்ணெய் கடத்தல் | செந்தில்ராஜா (12–2–10) காலைக்கதிர் |
| 694. | 7.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** கிருஷ்ணகிரியை அடுத்த லக்கபெத்தனப்பள்ளியைச் சேர்ந்த சிறுமி லட்சுமி(4). குரல்நத்தம் கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் (26). சிறுமி லட்சுமியிடம் சில்மிஷம் செய்ததால் லட்சுமியின் பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | செந்தில்ராஜா (12–2–10) காலைக்கதிர் |
| 695. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் மகள் நர்மதா(26). உடன் பணிபுரியும் குருநாதன்(23) நர்மதாவை காதலித்து வந்தார். நர்மதாவுக்கு பெற்றோர் ஏற்பாட்டில் திருமணம் நிச்சயம் ஆன நிலையில் அலைபேசியில் ஆபாசா எஸ்.எம்.எஸ் அனுப்பியதோடு திருமணத்தை நிறுத்தும்படி மிரட்டுவதாகவும் நர்மதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | அறிவு (13.2.10) தமிழ்சுடர் |
| 696. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** தேன்கனிக்கோட்டை அடுத்த அர்த்தகூர் கிராமத்தைச் சேர்ந்த சீதாராமன் (32) மனைவி ராதா(25). குடும்ப வறுமை காரணமாக ராதா கிணற்றில் விழுந்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & வறுமை– தற்கொலை | செந்தில்ராஜா (13–2–10) தினத்தந்தி |
| 697. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அப்பாவு தெருவைச் சேர்ந்த மாரி(25) மனைவி சுதா(23). கணவன் மற்றும் குடும்பத்தார் கூடுதல் | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (13–2–10) தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக சுதா புகார். | | |
| 698. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு மேல்தெருவைச் சேர்ந்த சேகர்(29) மனைவி தேன்மொழி. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் தேன்மொழி தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா (13–2–10) தினத்தந்தி |
| 699. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு அருகே உள்ள பந்தார அள்ளியைச் சேர்ந்த முருகன் மனைவி மாதம்மாள்(25). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதால் மாதம்மாள் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா 14–2–10) தினத்தந்தி |
| 700. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சவுகார் பேட்டை ஏகாம்பரேஸ்வரர் கோயில் தெருவைச் சேர்ந்த தினேஷ் மனைவி மனீஷா(25). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியும், குளிக்கும் போதும், ஆடை மாற்றும் போதும், தினேஷும் அவரது பெற்றோரும் ஆபாச படம் எடுத்து இன்டர் நெட்டில் போட்டு விடுவோம் என மனிஷாவை மிரட்டிவருவதாக மனிஷா புகார். | பெண்கள் மீதான வன்முறை | அறிவு (14.2.10) தினத்தந்தி |
| 701. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** பொம்மிடியைச் அடுத்த பயநத்தம் கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் மனைவி பவித்ரா. கணவன் மனைவி தகராறில் பவித்ரா தீக்குளித்துத் தற்கொலைக்கு முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (15–2–10) தினத்தந்தி |
| 702. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** ஒசூர் அருகே போடூரைச் சேர்ந்த வெங்கடேஷ் மனைவி சுசீலா(32). சுசீலாவுக்கு கழுத்தில் கட்டி இருந்ததால் அதனை அகற்ற உயிர் காக்கும் உயர் சிகிச்சை காப்பீடுத் திட்டத்தில் ஒசூர் மருத்துவமனையில் சுசீலாவுக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது. பின் கோமா நிலையிலேயே இறந்ததால் உறவினர்கள் போராட்டம். | அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | செந்தில்ராஜா (15–2–10) காலைக்கதிா |
| 703. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னையை அடுத்த புழல் சிவராஜ் தெருவைச் சேர்ந்த குப்புசாமி மகள் நதியா(17). அதே பகுதியைச் சேர்ந்த தனஞ்செழியன்(23). | பெண்கள் மீதான வன்முறை | அறிவு (15.2.10) தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நதியாவை பின்தொடர்ந்து சென்று தனஞ்செழியன் காதலிக்குமாறு கட்டாயப்படுத்தி துன்புறுத்துவதாக ஆபாச எஸ்.எம்.எஸ். அனுப்புவதாகவும் நதியா புகார். | | |
| 704. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** கெலமங்கலம் ஜீவா நகரைச் சேர்ந்த மாதேஸ் மனைவி ஜெயா(30). கணவன் மனைவி குடும்ப தகராறில் ஜெயா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா (15–2–10) காலைக்கதிர் |
| 705. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** காரிமங்கலம் காட்டுசிகலஹள்ளியைச் சேர்ந்த சின்னராஜ் மனைவி ராணி(40). காட்டில் மாடு மேய்க்க சென்ற இவரை அதே பகுதியைச் சேர்ந்த ராஜூ (23) பாலியல் பலாத்காரம் செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (15–2–10) காலைக்கதிர் |
| 706. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செய்யாறு தாலுகா சிறுவஞ்சிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த குப்பன்(25). மனைவி கீர்த்தனா(20). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதால் மனமுடைந்த கீர்த்தனா தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (15–2–10) தினகரன் |
| 707. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசப்பாக்கம் அடுத்த அருணகிரிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் 8 வயது மகளை அதே பகுதியைச் சேர்ந்த ரமேஷ் (28). பாலியல் பலாத்காரம் செய்ததாக கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கர் (15–2–10) தினகரன் |
| 708. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செய்யாறு அடுத்த பாண்டியம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தூசி மகள் ஜானகி (19). அதே கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் தனது மகள் ஜானகியை கடத்தியதாக தூசி புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | பாஸ்கர் (15–2–10) தினகரன் |
| 709. | 7.3.2010 | **வேலூர் மாவட்டம்:** பெருமுகை பீடி குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த ஜெயசீலன் மனைவி துளசி(35). அதே தெருவைச் சேர்ந்த குருமூர்த்தி(61), தேசிங்கு(40) வீட்டில் தனியாக இருந்த துளசியை ஆபாசமாக பேசியதாக துளசி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (16–2–10) தினமலர் |
| 710. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (16–2–10) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேங்கிக்கால்புதூர் சந்தோஷ் நகரைச் சேர்ந்த குமரன்(43). மகள் லட்சுமி(16). அதே பகுதியைச் சேர்ந்த ரஞ்சித்குமார் தனது மகளை கடத்திச் சென்றதாக குமரன் புகார். | & கடத்தல் | தினகரன் |
| 711. | 7.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அருகே தகரகுப்பம், தும்பேரி, வெலதிகாமணிபெண்டா பகுதிகளில் உள்ள பஸ் நிறுத்தம் அருகே கேட்பாரற்று கிடந்த மூட்டைகளைப் பிரித்து பார்த்ததில் 2 டன் ரேசன் அரிசி மூட்டைகள் பறிமுதல் | ரேசன் அரிசி கடத்தல் | பாஸ்கர் (16–2–10) தினமலர் |
| 712. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை கீழ்கட்டளையைச் சேர்ந்த கந்தசாமி மகன் சிவா என்கிற சிவக்குமார்(37). சிறைக் கைதியான இவர் புழல் சிறையில் தூக்குப்போட்டு தற்கொலை. | சிறைச்சாலை வன்முறை & தற்கொலை | அறிவு (16–2–10) தினத்தந்தி |
| 713. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த மங்கலம் அருகே உள்ள கருமாரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஷகிலா(28). அதே ஊரைச்சேர்ந்த வசந்தன்(36). இருவருக்கும் இடையே நடந்த தகராறில் வசந்தன் தாக்கியதாக ஷகிலா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (17–2–10) தினகரன் |
| 714. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செய்யாறு அடுத்த புளியரம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த வரதன் மனைவி காமாட்சி(45). அதே பகுதியைச் சேர்ந்த பச்சையப்பன் மனைவி குமாரி (40). இருவருக்கும் நடந்த நிலத்தகராறில் குமாரி மற்றும் அவரது இருமகன்கள் சேர்ந்து தன்னை தாக்கியதாக காமாட்சியை புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (17–2–10) தினகரன் |
| 715. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** முத்து விநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த ரங்கநாதன் மனைவி ரேணுகா. இவருக்கும் ரங்கநாதனின் அக்காள் மகன் கணேசனுக்கும் ஏற்பட்ட குடும்ப தகராறில் கணேசன் தாக்கியதாக ரேணுகா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (17–2–10) தினகரன் |
| 716. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செங்கம் அடுத்த முத்துனூர் கிராமத்தைச் சேர்ந்த தேவராஜன் (40) மனைவி உஷா(35). கணவன் மனைவி குடும்ப தகராறில் உஷா தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (18–2–10) தினகரன் |
| 717. | 7.3.2010 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் | வகுப்பறை | பாஸ்கர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடுத்த அன்வர்த்திகான்கேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் ஆவதம் புதுப்பேட்டை முஸ்லிம் அரசினர் தொடக்கப்பள்ளியில் மதியம் சத்தணவு சாப்பிட்ட 50 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியருக்கு வாந்தி மயக்கம். | வன்முறை | (18–2–10) தினமலர் |
| 718. | 7.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** வேப்பனப்பள்ளி ஒன்றியம் பள்ளேப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த ராஜலிங்கம் (எ) சுரேஷ் மனைவி கோமதி சங்கரி (26). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சுரேஷ் கம்பியால் கோமதியை தாக்கியதாகக் கைது. | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (19–2–10) தினகரன் |
| 719. | 7.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** தேன்கனிக்கோட்டை அருகே ஜான் பிரிட்டோ மேல்நிலைப்பள்ளியில் 7–ம் வகுப்பு ஆசிரியர் திருவள்ளத்தரசு, மாணவிகளிடம் சில்மிஷம் செய்தாகவும், மாணவிகளை மனைவிகளாக அழைப்பதாகவும் புகார். | வகுப்பறை வன்முறை | செந்தில்ராஜா |
| 720. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னையை அடுத்த கொட்டிவாக்கம் ஏ.ஜி.எஸ். காலனியைச் சேர்ந்த அரசியிடம் 4 வாலிபர்கள் கேலி செய்ததாக அரசி புகார். | பெண்கள் மீதான வன்முறை | அறிவு (19–2–10) தினத்தந்தி |
| 721. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** சமுத்திரம் காலனியைச் சேர்ந்த சிவராமன். தண்டராம்பட்ட ரோட்டைச் சேர்ந்த பள்ளி மாணவியிடம் வழிமறித்து ஈவ்டீசிங் செய்ததாக சிவராமன் கைது. | ஈவ்டீசிங் | பாஸ்கர் (19–2–10) தினமலர் |
| 722. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** மாரண்ட அள்ளியை அடுத்த அரூரைச் சேர்ந்த சின்னதம்பி மகள் லாவண்யா. அமானிமல்லாபுரத்தில் உறவினர் வடிவேல் வீட்டில் தங்கி +12 படித்து வந்தார். அதே பகுதியைச் சேர்ந்த அருண் லாவண்யாவை கடத்தி சென்றதாக சின்னதம்பி புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | செந்தில்ராஜா (20–2–10) தினத்தந்தி |
| 723. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** பொம்மிடி அருகே உள்ள பையர்நத்தம் அருகே அம்பேத்கார் நகரையைச் சேர்ந்த சுரேஷ்(27) மனைவி பவித்ரா (22). கணவன் மனைவி குடும்ப தகராறில் பவித்ரா தீக்குளித்து தற்கொலைக்கு முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (20–2–10) தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 724. | 7.3.2010 | **வேலூர் மாவட்டம்:** ஆரணி பத்திரப்பதிவு அலுவகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் நடத்திய அதிரடி சோதனையில் கணககில் வராத ரூ.24.600 ரொக்கப்பணம் பறிமுதல். | லஞ்சம் | பாஸ்கர் (20–2–10) தினகரன் |
| 725. | 7.3.2010 | **வேலூர் மாவட்டம்:** ஆரணி அடுத்த காமக்கூரைச் சேர்ந்த வேலன் (38) மனைவி லட்சுமி(33). தனது கணவருக்கு 2வது திருமணம் செய்து வைப்பதற்காக கணவர் மற்றும் குடும்பத்தார் தன்னை அடித்துச் சித்திரவதை செய்வதாக லட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (17–2–10) தினகரன் |
| 726. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கமலப்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வம் மகள் பிளஸ்1 மாணவி. சிறுகிளாம்பாடியைச் சேர்ந்த பிளஸ்1 மாணவன் சதீஷ்குமார் கேலி, கிண்டல் செய்ததாகவும் வெளியில் சொன்னால் கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாக செல்வம் புகார். | ஈவ்டீசிங் | பாஸ்கர் (20–2–10) தினகரன் |
| 727. | 7.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** பர்கூர் அடுத்துள்ள தாளக்கரை பகுதியைச் சேர்ந்த குமார் மனைவி மகேஸ்(22). இவர் அந்தியூரில் உள்ள மூங்கில் டெப்போவில் பணியாற்றி வந்தார். டெப்போ உரிமையாளர் லோகநாதன் (31) ராமலிங்கம் இருவரும் மகேசை பாலியல் பலாத்காரம் செய்ததாக மகேஸ் புகார். | பெண்கள் மீதான வன்முறை | k. பெருமாள் (21–2–10) தினகரன் |
| 728. | 7.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** அந்தியூர் அருகே உள்ள பள்ளிபாளையத்தைச் சேர்ந்த செந்தில்குமார்(35) மனைவி காமாட்சி(32). கணவன் மனைவி தகராறில் காமாட்சி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | k. பெருமாள் (21–2–10) காலைக்கதிர் |
| 729. | 7.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத்த விரிஞ்சிபுரத்தை சேர்ந்த வானதி. அதே கிராமத்தைச் சேர்ந்த முகுந்தராஜன்(29). திருமணம் செய்து கொள்வதாக கூறி கர்ப்பம் ஆக்கி ஏமாற்றியதாக வானதி புகார். | பெண்களுக்கு எதரான வன்முறை | பாஸ்கர் (21–2–10) தினமலர் |
| 730. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை நீலங்கரை அடுத்த பாரதியார் நகரில் உள்ள 11–வது தெருவில் வசித்து வருபவர் விநாயகமூர்த்தி மகள் காயத்ரி. பள்ளி சென்று திரும்பிய காயத்ரி வீட்டில் | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | அறிவு (21.2.10) தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீக்குளித்த தற்கொலை. | | |
| 731. | 7.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அடுத்த பெரிய வெள்ளக்குட்டை கிராமத்தைச் சேர்ந்த திருப்பதி(30). கொத்தக்கோட்டை அருகே உள்ள மயில்பாறை கல்குவாரியில் வேலைக்கு சென்ற இடத்தில் தொழிலாளர்கள் பாறைகளை தகர்ப்பதற்காக வைத்த வெடி விபத்தில் சிக்கி திருப்பதி மரணம். | வெடி விபத்து | பாஸ்கர் (21–2–10) தினமலர் |
| 732. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** மாத்தூர் அருகே வாலிப்பட்டி கொல்லகொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த சொக்கநாதன்(30) மனைவி சத்யா(22). கணவன் மனைவி தகராறில் சத்யா விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா (22–2–10) தினத்தந்தி |
| 733. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வானாபுரம் அரகே உள்ள பேராயம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த தனக்கோட்டி மகன்கள் ராமசாமி, ஆறுமுகம். இருவருக்கும் இடையே ஏற்பட்ட நிலத்தகராறில் ராமசாமியின் மனைவி சித்ராவை ஆறுமுகம் தாக்கியதாக சித்ரா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (22–2–10) தினகரன் |
| 734. | 7.3.2010 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரம் செவிலிமேட்டைச் சேர்ந்த பார்த்திபன்(25) மனைவி நிவிதா(21). தனது கணவர் பார்த்திபன் திருமணத்தின் போது வக்கீல் என கூறி ஏமாற்றியதாகவும். கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதாகவும் நிவிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | அறிவு (22.2.10) தினத்தந்தி |
| 735. | 7.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** பெருமுகைபுதூரைச் சேர்ந்த ருத்ரமூர்த்தி மனைவி அன்னபூரணி. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதாக அன்னபூரணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | k. பெருமாள் (22–2–10) காலைக்கதிர் |
| 736. | 7.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** பெரியார்நகரைச் சேர்ந்த தர்மேந்திரன்(34) மனைவி கோமதி(29). கணவர் மற்றும் குடும்பத்தார் சித்திரவதை செய்வதாக கோமதி புகார். | பெண்கள் மீதான வன்முறை | k. பெருமாள் (22–2–10) காலைக்கதிர் |
| 737. | 7.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த வர்ணாபுரம் செங்கரும்பலூர் கிராமத்தைச் சேர்ந்த கம்ருதீன் மனைவி ஞானசவுந்தரி(25). | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (23–2–10) தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த ஞானசவுந்தரி தூக்குப்போட்டு தற்கொலை. | | |
| 738. | 7.3.2010 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி அருகே பொன்மலையூரைச் சேர்ந்த வாசு மகள் அனிதா(22). இவரும் அதே ஊரைச்சேர்ந்த சசிகுமார் காதலித்து வந்தனர். திருமணம் செய்துகொள்வதாக சசிகுமார் ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக அனிதா புகார் கொடுத்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என சப்கலெக்டர் அலுவலகம் முன்பு போராட்டம். | பெண்கள் மீதான வன்முறை | k. பெருமாள் (23–2–10) தினமலர் |
| 739. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** செங்குன்றம் ஆட்டத்தாங்கல் கலைஞர் கருணாநிதி நகரைச் சேர்ந்த சுரேஷ்(36) மனைவி மேகலை. கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சுரேஷ் மனைவியை கேபிள் வயரால் கழுத்தை நெறித்து கொன்றதாக கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | அறிவு (23–2–10) தினகரன் |
| 740. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னையை அடுத்த புழல் லட்சுமிபுரத்தைச் சேர்ந்த சீதா(17). அதே பகுதியைச் சேர்ந்த தியாகு(25). இவர் சீதாவிடம் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல் சீதா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | அறிவு (23.2.10) தினத்தந்தி |
| 741. | 7.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** கிருஷ்ணம் பாளையத்தில் 100 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்தும் வரும் தலித்துகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்கவேண்டும். அரச்சலூரில் தலித்துகளுக்கான மயாணத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம். | தலித்துகள் மீதான ஆக்கிரமிப்பு | k. பெருமாள் (24–2–10) மாலைமலர் |
| 742. | 7.3.2010 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி ஸ்ரீரங்கம் சாத்தார வீதியில் 'ஆறுமுகசாமிகள் எஜுகேஷனல் அண்ட சாரிட்டபிள் டிரஸ்ட் என்ற பெயரில் ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தை நடத்தி வந்தார் பழனியப்பன். அங்கு தங்கியிருந்த சிறுமிகளிடம் பாலியல் வன்முறை செய்ததாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | குமுதம் ரிப்போர்ட்டர் |
| 743. | 7.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வேலூரில் இருந்து ஆந்திராவுக்கு கடத்த இருந்த 3.5 டன் ரேசன் அரிசியை வட்ட வழங்கல் | ரேசன் அரிசி கடத்தல் | பாஸ்கர் (24–2–10) தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துறை மற்றும் பறக்கும் படையினர் பறிமுதல் . | | |
| 744. | 7.3.2010 | **தஞ்சை மாவட்டம்:** தஞ்சை ஆயுதப்படை மைதானம் அருகில் உள்ள இந்திரா நகரில் குடியிருக்கும் குழந்தைகள சிவகணேசன், மோகன், ஸ்ரீதர். தினமும் பள்ளி சென்று திரும்பி குழந்தைகள் ஆயுதப்படை மைதானத்தில் விளையாடுவார்கள். சம்பவத்தினத்தன்று டிஐஜி மனைவி திருமதி.சிங் ஆயுதப்படை மைதானத்தைச் சுற்றி வரும்போது குழந்தைகள் சிங் மீது இடித்துவிட்டார்கள். மேற்படி குழந்தைகள் 4 பேரையும் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று நிர்வாணப்படுத்தி அடித்து சித்திரவதை செய்து நள்ளிரவு 1 மணிக்கு மேல் குழந்தைகள் விடுவிப்பு. | குழந்தைகள் மீதான வன்முறை & காவல் நிலைய வன்முறை | டெக்கான் கிரானிக்கல் செந்தில் |
| 745. | 7.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் சைதாப்பேட்டை பகுதியில் உள்ள ரொட்டி தயாரிப்பு கடையில் பணியாற்றி வந்த மணிகண்டன்(13). என்ற சிறுவன் மீட்கப்பட்டு ரொட்டிக் கடை சீல் வைக்கப்பட்டது. | குழந்தை தொழிலாளர் மீட்பு | பாஸ்கர் (24–2–10) தினமலர் |
| 746. | 7.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** கொடுமுடி போலீஸ் ஸ்டேஷனில் மாமூல் வாங்குவதில் போலீசாரிடையே நடந்த வரும் கோஷ்டி மோதல். | காவல் நிலைய வன்முறை & லஞ்சம் | k. பெருமாள் (25–2–10) காலைக்கதிர் |
| 747. | 7.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** பழையபேட்டையைச் சேர்ந்த சீனிவாசன் மனைவி ராதா(39). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டுத் துன்புறுத்துவாக ராதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (25–2–10) தினத்தந்தி |
| 748. | 7.3.2010 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செய்யாறு அருகே அடையாளச்சேரியைச் அடுத்த கருமாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த காளி மகன் ரமேஷ் (எ) கருப்பன்(28). விசாரணைக் கைதியாக சிறையில் அடைக்கப்பட்டு இருந்த ரமேஷ் மர்மமான முறையில் இறந்ததாக புகார். | சிறைச்சாலை வன்முறை | அறிவு (25.2.10) தினத்தந்தி |
| 749. | 7.3.2010 | **கோவை மாவட்டம்:** காளப்பட்டி ரோட்டில் உள்ள தனியார் கல்லூரியில் முதலாமாண்டு படிப்பவர் ஸ்ரீஜித்(20). அதே கல்லூரியல் உடன் படிக்கும் மாணவன் அகில் கேலி செய்ததாகவும் உடன் படிக்கும் மாணவர்கள் பின்டோ, | ஈவ்டீசிங் | k. பெருமாள் (25–2–10) காலைக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிஷாந்த், விஜயகிருஷ்ணன் தட்டிகேட்டதால் ஆத்திரமடைந்த அகில் அவர்கள் மூவரையும் கத்தியால் குத்தியதாக ஸ்ரீஜித் புகார். | | |
| 750. | 7.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டி அருகே எச்.புதுப்பட்டியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மகள் ரம்யா(20). அரூர் கச்சேரி மேட்டைச் சேர்ந்த விஜயகாந்த்(30) ரமேஷ்(23). இருவரும் ரம்யாவை கடத்த முயன்றதாக கைது. | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா (26–2–10) தினத்தந்தி |
| 751. | 9.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை ராயைப்பேட்டை அரசு மருத்துவமனையில் மனநலம் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு சிகிச்சையளிக்காமல் மண்தரையில் படுக்க வைத்ததாக பொதுமக்கள் புகார். | அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | அறிவு (26.2.10) தினத்தந்தி |
| 753. | 7.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னையை அடுத்த ஆவடி ராஜீவ்காந்தி நகரைச் சேர்ந்த மின்சார வாரிய காண்டிராக்டர் ஜயப்பன். இவர் பள்ளிக்கரணை மின்சாரவாரியத்திற்கு மின் பணி அமைத்தது தொடர்பான பில்வழங்க கோரி உதவி என்ஜினீயர் குருக்மானந்தனை(40) அணுகினார். அவர் பில் வழங்க காண்டிராக்ரிடம் ரூபாய் 12 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 754. | 7.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே விரகனூரைச் சேர்ந்த தவச்செல்வம்(32) மனைவி உமாராணி(27). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதாக உமாராணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 755. | 7.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவையை அடுத்த க.க.சாவடி அருகே வாகனை சோதனையில் போது கோவையில் இருந்து கேரளாவிற்கு கடத்த முயன்ற 12 மூட்டைகளில் 600 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தீக்கதிர் |
| 756. | 7.3.2010 | **தேனி மாவட்டம்:** கம்பம், கூடலூர், பகுதி மாணவர்கள் சிலர் கேரளாவிற்கு அரிசி கடத்தும் செயலில் ஈடுபட்டுள்ளனர். இரு சக்கர வாகனத்தில் அரிசி கடத்துவதற்கு ஒரு தடவைக்கு ரூ.200 வரை மாணவர்களுக்கு பணம் வழங்கப்படுவதாக தகவல். | ரேசன்அரிசி கடத்தல் & குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 757. | 7.3.2010 | **கன்னியாகுமரி மாவட்டம்:** உதயமார்த்தாண்டத்தை சேர்ந்த லாசர் மதபோதகராக உள்ளார். இவரது மனைவிக்கும் மகளிர் குழுவுக்கும் இடையே நடந்த மோதலில் போலீசார் லாசர் மீது பொய் வழக்கு பதிந்து சட்ட விரோதக் காவலில் வைத்து சித்திரவதை செய்ததாக லாசர் உயர்நீதிமன்றத்தில் மனு. | காவல்துறை சித்திரவதை | தினகரன் |
| 758. | 8.3.2010 | **தேனி மாவட்டம்:** ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட சக்கம்பட்டி பகவதியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த பால்ராஜ் மனைவி முத்துபாலா(26). பிரசவ வலியால் ஆண்டிபட்டி மருத்துவமனைக்கு சென்ற போது அங்கு மருத்துவர்கள் அலட்சியப் போக்குடன் நடந்ததகவும் மருத்துவமனையில் அனைத்து வசதிகளும் இருந்தும் தேனி மருத்துவமனைக்கு செல்லுமாறு டாக்டர்கள் கூறியதாகவும். இவ்வாறு பிரசவத்திற்கு வரும் பெண்கள் அலைக்கழிக்கப்படுவதாக பொதுமக்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை & அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | தமிழ்சுடர் |
| 759. | 8.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே நமஸ்கரித்தான்பட்டியில் கேப் வெடி தயாரிக்கும் ஆலையில் கேப் வெடிதாள்களை அடுக்கும் பணியில் ஈடுபட்ட போது வெடிதாள்கள் உரசி ஆவுடையம்மாள்(50) கிருஷ்ணன்(45). இரு தொழிலாளர்களும் படுகாயம். | பட்டாசு | தினமணி |
| 760. | 8.3.2010 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகில் உள்ள கருமாத்தூர் பகுதியைச் சேர்ந்த புலித்தேவன்பட்டியைச் சேர்ந்த பாண்டி மகள் சுந்தரி(14). அதே ஊரைச்சேர்ந்த பிரபு(24) பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதால் அவமானமடைந்த மாணவி தீக்குளித்து தற்கொலை. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & தற்கொலை | தினமணி |
| 761. | 8.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை அனுப்பானடி டீச்சர்ஸ் காலனியைச் சேர்ந்த சேவியர்தேவசகாயம் மனைவி பெமினாமேரி. ஷாம் ஆசிர் ஷாம் ஆர்தர், சேவியர் மனைவி பெமினாமேரியிடம் போனில் தரக்குறைவாக பேசியதாக புகார் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 762. | 8.3.2010 | **வேலூர் மாவட்டம்:** சத்துவாச்சாரி கொல்லைமேடு பகுதியைச் சேர்ந்த அன்பழகன் மனைவி குமாரி(21). அதே பகுதியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி குமாரியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக குமாரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (தினமலர்) |
| 763. | 8.3.2010 | **கடலூர் மாவட்டம்:** பண்ருட்டி புதுப்பேட்டையைச் சேர்ந்த மலர்கொடி மகன் முரஹரி(15). தனியார் பள்ளியில் விடுதியில் தங்கி 10–ம் வகுப்பு படித்து வந்தார். விடுதியின் சுவர் இடிந்து விழுந்ததில் மாணவன் முரஹரி மரணம். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 764. | 8.3.2010 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி ராமுத்தேவர் நகரை சேர்ந்த ராஜாக்கிளி மகள் கோகிலா. அதே நகரைச் சேர்ந்த துரைப்பாண்டியன்(21). திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல். கோகிலா கர்ப்பம். துரைப்பாண்டியன் ஏமாற்றியதால் கோகிலா தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 765. | 8.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** நரிக்குடி அருகே உள்ள விடத்தக்களம்புதூரைச் சேர்ந்த தர்மராஜ் மகள் கிருஷ்ணவேணியும். அதே ஊரைச் சேர்ந்த ஆண்டி மகன் முனியசாமியும் காதலித்து வந்தனர். முனியசாமி குடும்பத்தினர் கிருஷ்ணவேணியை அவமானப்படுத்தியதால் மனமுடைந்து கிருஷ்ணவேணி தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 766. | 8.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை மாநகராட்சி அலுவலர் கணேசன்(51) கொளத்தூர் பிரிவில் துப்புரவு ஆய்வாளராக பணியாற்றினார். அதே பிரிவில் பணிபுரியம் முத்து(32) இடமாற்றம் கேட்டு விண்ணப்பித்தார். முத்துவின் இடமாற்றத்திற்கு கணேசன் ரூபாய் 2 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக கைது. | லஞ்சம் | தினமலர் |
| 767. | 9.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செய்யார் தாலுகா, தென்யிலுப்பைக் கிராமத்தைச் சேர்ந்த வாசு. அனக்காவூர் காவல் நிலையம் அருகில் வாசுவின் உடல் கண்டுபிடிப்பு. | காவல் நிலைய வன்முறை | பாஸ்கர் |
| 768. | 9.3.2010 | **திருச்சி மாவட்டம்:** ஸ்ரீரங்கத்தில் உள்ள ஆட்டோ டிரைவர். ஸ்ரீரங்க காவல்நிலைய காவலர்கள் ஆட்டோ | காவல் நிலைய வன்முறை | ஜெயா TV |

| | | | | |
|---|---|---|---|---|
| | | டிரைவரை சட்டவிரோத காவலில் வைத்து அடித்து சித்திரவதை. உயிர் போகும் நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை. 200 ஆட்டோ டிரைவர் ஸ்ரீரங்க காவல்நிலையத்தை முற்றுகை. | | |
| 769. | 9.3.2010 | **கரூர் மாவட்டம்:** ராயனூர் அருகில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் பத்மாவதி. கரூர் காவல் நிலைய காவலர்கள் பத்மாவதியை விசாரணைக்கு அழைத்து சென்று அடித்து சித்திரவதை. வெற்று தாளில் பத்மாவதியிடம் கையெழுத்து பெற்று காவலர்கள் கொடுமை. வீட்டிற்கு வந்த பத்மாவதி தீக்குளித்து தற்கொலைக்கு முயற்சி. நீதிபதியிடம் வாக்கு மூலம். | காவல் நிலைய வன்முறை | பிரபாகர் |
| 770. | 9.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை சின்னசொக்கிகுளத்தைச் சேர்ந்த மீரான் மைதீன் மனைவி சபீனாபேகம். விடுதி ஒன்றை நடத்தி வந்தார். விடுதியில் தங்கியிருந்த அஷியாவின்னரசி(19). நடத்தை சரியில்லாததால் விடுதியை காலி செய்யும்படி கூறியதால் ஆத்திரமடைந்த அஷியாவின்னரசி ரவுடி வரிச்சியூர் செல்வம் மூலம் சபீனாபேகத்தை மிரட்டியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 771. | 10.3.2010 | **தர்மபுரி மாவட்டம்:** இரண்டூர் அருகே உள்ள அக்ரஹாரம் செக்போஸ்ட்டில், அன்புமணி வந்த காரை போலீசார் சோதனை நடத்த முயன்றனர். அப்போது பா.ம.கா.,வினருக்கும், போலீசுக்கும் இடையே வாக்குவாதம். பா.ம.க.வினரை காவலர்கள் தடியடி நடத்தி கலைப்பு. | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 772. | 10.3.2010 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அரசு கல்லூரி மாணவர் ஒருவர் கருங்காலக்குடியில் இருந்து அரசு பேருந்தில் வந்தார். பஸ் கல்லூரி முன்பு நிற்காமல் சென்றதால் மாணவனுக்கும் கண்டக்டருக்கும் தகராறு ஏற்பட்டது. போலீசார் மாணவர்களை தடியடி நடத்தித் தாக்குதல். மாணவர்கள் போராட்டம். | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 773. | 10.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன் சத்திரம் கே.ஆர்.அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் வசித்து வருபவர் ராஜா மனைவி சியாமளா(45). திருச்சி துறையூரைச் சேர்ந்த பாண்டியன்(38). இருவருக்கும் | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடந்த தகராறில்ஆத்திரமடைந்த பாண்டியன் சியாமளாவை கட்டையால் தாக்கி கொலை. | | |
| 774. | 10.3.2010 | **தூத்துக்குடி மாவட்டம்:** போல்போட்டை கிழக்கு பகுதியைச் சேர்ந்த சின்னசாமி(31). மனைவி மகாலட்சுமி. கணவன் மனைவி குடும்ப தகராறில் மனமுடைந்த மகாலட்சுமி விஷம் அருந்தி தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 775. | 10.3.2010 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி–தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் காட்டூரில் சாலையின் இடதுபுறம் லிட்டில் பிளவர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி உள்ளது. நான்கு வழி சாலை போடும் பணி நடைபெறுவதால் விபத்துகள் அதிகம் நடப்பதால் பாதை அமைத்து தரக்கோரி லிட்டில் பிளவர் பள்ளி மாணவ, மாணவியர், ஆசிரியர், மற்றும் பெற்றோர் மறியல். போலீஸ் தடியடி. பலர் படுகாயம். | காவல் துறை வன்முறை | தினகரன் |
| 776. | 11.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** சின்னாளபட்டி அருகில் உள்ள மேளக்கோட்டையில் வசிக்கும், தலித் சமூகத்தைச் சேர்ந்த கர்ப்பிணி பெண் முத்துச் செல்வி மற்றும் 3 இளைஞர்கள். மேலக்கோட்டையில் ஆதிக்க சமூகத்தினருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே நடந்த தகராறில் தலித் இளைஞர்கள் மூவரையும், கர்ப்பிணி பெண் முத்துச்செல்வியையும், சின்னாளபட்டி உதவி காவல் ஆய்வாளர் முருகன் விசாரணைக்கு அழைத்துச் சென்று அடித்துச் சித்திரவதை. | காவல் நிலைய வன்முறை & தலித்துகள் மீதான வன்முறை | எக்ஸ்பிரஸ் |
| 777. | 11.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே கூத்தியார்குண்டு பகுதியைச் சேர்ந்த மந்தக்காளை மகள் பாண்டியம்மாள்(20). வடிவேல்கரையைச் சேர்ந்த காசிநாதன்(21) திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல். பாண்டியம்மாள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 778. | 11.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** சென்னை புதுப்பேட்டை எல்லப்பன் தெருவைச் சேர்ந்த பஷீர்அகமது (36). நடிகை பிந்துவுடன் காரில் திண்டுக்கல் வந்த போது இன்ஸ்பெக்டர் ஜனார்த்தனன் | காவல் நிலைய வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இவர்களை லாட்ஜில் அடைத்த வைத்து பணம் கேட்டதாக பஷீர் அகமது புகார். இந்த வழக்கில் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்த பஷீரை இன்ஸ்பெக்டர் மிரட்டியதால் அவரை கைது செய்ய நீதிபதி உமாராணி உத்தரவிட்டார். | | |
| 779. | 11.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே வீரதானூரை சேர்ந்த செல்வி மகன் சின்னராஜன்(18). அதே ஊரைச் சேர்ந்த கருப்பணன் மகள் மலையாயி(22). சின்னராஜன் தன்னை காதலித்ததாக போலீசில் புகார் கொடுத்தார். காவலர்கள் சின்னராஜை காவல்நிலையம் அழைத்து சென்று இருவருக்கும் கட்டாய திருமணம் செய்து வைத்ததாக செல்வி மனு. | கட்டாயத் திருமணம் | தினமலர் |
| 780. | 11.3.2010 | **கன்னியாகுமரி மாவட்டம்:** தூத்துரைச் சேர்ந்த ஜோஸ் மனைவி அமலா. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தி தனது மகளை கொலை செய்ததாக அமலாவின் தந்தை ஸ்டீபன் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் மனு. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தமிழ்சுடர் |
| 781. | 11.3.2010 | **மதுரை மாவட்டம்:** செல்லூர் கீழத்தோப்பைச் சேர்ந்த வித்யாதேவி(21). மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த வித்தியாதேவி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 782. | 11.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை கூடல்புதூர் அருகே பாசிங்காபுரம் பகுதியைச் சேர்ந்த பகதூர்சிங்கம் மகள் வித்யா(18). பள்ளி சென்ற மாணவியை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 783. | 11.3.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் அருகே குதிரைச்சந்தல் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி தனவேல். தனது விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வழங்க கோரி இளநிலை பொறியாளர் குபேந்திரனை அணுகினார். அவர் மின் இணைப்பு வழங்க அவர் ரு. 3.500 லஞ்சம் கேட்டதாக தனவேல் புகார். | லஞ்சம் | தினகரன் |
| 784. | 11.3.2010 | **சேலம் மாவட்டம்:** இடைப்பாடி அருகே தங்காயூர் ஊராட்சியில் உள்ள கோணங்குட்டையூர். இங்கு வாழும் | தலித்துகள் மீதான வன்முஜ சுடுகாடு | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருந்ததியர் சமூகத்து மக்களுக்கு இறந்தவர்களின் உடலை புதைக்க இடமில்லை என பொதுமக்கள் மறியல். | பிரச்சனை | |
| 785. | 12.3.2010 | **திருச்சி மாவட்டம்:** பிச்சாண்டார் கோவில் செண்பகாத்தெருவைச் சேர்ந்த வக்கீல் அர்ஜுனன் (60). நெடுஞ்சாலை பணியின் போது தனது நிலத்தை அரசு கையகப்படுத்தியது. இழப்பீடு தொகைக்கான காசோலை கேட்டு தாசில்தார் முத்துலெட்சுமியை அணுகினார். அவர் ரூபாய் 1000 லஞ்சம் கேட்டதாகவும், அர்ஜுனன் புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 786. | 12.3.2010 | **மதுரை மாவட்டம்:** செல்லூரைச் சேர்ந்த மோகன் மகள்கள் கவிதா, சூர்யா (17). கவிதாவை பெண் கேட்டு வந்த பெங்களூரைச் சேர்ந்த சந்திரசேகரை திருமணம் செய்ய கவிதா மறுப்பு. ஆத்திரமடைந்த சந்திரசேகர் கல்லூரி மாணவியான சூர்யாவை கடத்தி சென்று கட்டாய திருமணம் செய்ததாக அவரது அக்கா கவிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 787. | 12.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை நரிமேடு முல்லை நகர் பகுதியைச் சேர்ந்த பாலு மகள் சிறுமி சுதாவுக்கும் (16) அதே பகுதியைச் சேர்ந்த ராஜேசுவரனுக்கும் திருமணம் செய்வது என முடிவானது. திருமணம் வயதை எட்டாத பெண்ணுக்கு திருமணம் செய்ய கூடாது என போலீசார் தடுத்தனர். | குழந்தைத் திருணம் | தினத்தந்தி |
| 788. | 12.3.2010 | **தேனி மாவட்டம்:** கேரள மாநிலம் பூப்பாறையைச் சேர்ந்த முனியாண்டி மகள் பிரியா(15). விடுதியில் தங்கி போடியில் உள்ள அரசு பள்ளி ஒன்றில் பத்தாம் வகுப்பு படித்து வந்தார். தேர்பில் குறைவான மதிப்பெண் எடுத்ததால் ஆசிரியர் திட்டியதால் மனமுடைந்த பிரியா தற்கொலைக்கு முயன்றதாக புகார். | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 789. | 12.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் மணல் கொள்ளை நடைபெறுவதால் வாகன தணிக்கையில் ஈடுபட்டார் தாசில்தார் ஜெயந்தி. அந்த வழியாக மணல் ஏற்றி வந்த மங்காபுரத்தயைச் சேர்ந்த டிரைவர் சந்தனைக்காளை தான் ஒட்டி | மணல் கொள்ளை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வந்த டிராக்டரை தாசில்தார் ஜெயந்தி மீது ஏற்றி கொலை செய்ய முயன்றதாக புகார். | | |
| 790. | 12.3.2010 | **மதுரை மாவட்டம்:** ஊர்மெச்சிக்குளம் பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த ரமேஷ் மனைவி சிவசங்கரி(21). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த சிவசங்கரி தூக்குபோட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 791. | 12.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் வட்டத்திற்கு உட்பட்ட சங்கரபாண்டியபுரம் கிராமத்தில் 50 தலித் குடும்பங்கள் உள்ளனர். இவர்கள் பயன்படுத்திய சுடுகாட்டை சில தனியார் முள்வேலி போட்டு மறிப்பு. | தலித்துகள் மீதான வன்முறை சுடுகாடு பிரச்சணை | தீக்கதிர் |
| 792. | 12.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை டிவிஎஸ் நகர் பகுதியைச் சேர்ந்த மச்சக்காளை(56) கல்லூரி பேராசிரியரான இவர் மனைவி ரதி. மனைவியிடம் பணம் கேட்டு துன்புறுத்தியும் கொலை மிரட்டல் விடுத்ததாக ரதி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 793. | 12.3.2010 | **புதுக்கோட்டை மாவட்டம்:** அறந்தாங்கியில் உள்ள அரசு உதவிபெறும் சி.கே.ஆர்.சி. நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவிகள்130 பேர் ஊட்டி, கோவைக்கு சுற்றுலா சென்றனர். அங்கு ஆசிரியர் சின்னப்பராஜ் மாணவிகளிடம் சில்மிஷம் செய்ததாக புகார் கொடுத்தும் பள்ளி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என பெற்றோர் புகார். | வகுப்பறை வன்முறை & குழந்தைகள் மீதான பாலியல் வன்மமுறை | தினகரன் |
| 794. | 12.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவை மாவட்டம் வழியாக கேரளாவுக்கு மணல் கடத்த முயன்ற 6 லாரிகளை வாகனை சோதனையின் போது அதிகாரிகள் பறிமுதல். | மணல் கடத்தல் | தினகரன் |
| 795. | 12.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை சத்திரப்பட்டி அருகே அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்ட போது லாரியில் ஏற்றி வந்த 98மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினமலர் |
| 796. | 13.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் அருகேயுள்ள தாமரைப்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை | பள்ளி வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆசிரியராக பணியாற்றியவர் மரியஜோசப். இவர் பதவி இறக்கம் செய்யப்பட்டு துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அவர் பள்ளி சாவியையும், வருகை பதிவேட்டையும் எடுத்துச் சென்றதாக சஸ்பெண்ட் செய்யப்பட்டார். | | |
| 797. | 13.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே உள்ள வன்னியம்பட்டியில் உள்ள தனியார் பள்ளியின் இயற்பியல் ஆசிரியர் ராஜபாளையத்தைச் சேர்ந்த மாப்பிள்ளைசுப்பாராஜ் தெருவைச் சேர்ந்த ரவி. பள்ளிக்கு மது அருந்திவிட்டு வந்ததால் தலைமை ஆசிரியர் கோவிந்தன் கண்டித்ததால் ஆத்திரமடைந்த ரவி தலைமை ஆசிரியர் கோவிந்தை தாக்கியதாக புகார். | ஆசிரியர் மது அருந்தி வருதல் | தமிழ்சுடர் |
| 798. | 13.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே உள்ள முப்பிடாரி(39). திருவண்ணாமலை ஓடையில் அனுமதி இன்றி டிராக்டரில் மண் அள்ளியதாக டிராக்டர் பறிமுதல். | மணல் கொள்ளை | தமிழ்சுடர் |
| 799. | 13.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை வில்லாபுரம் பகுதியைச் சேர்ந்த நாகராஜ் மகன்கள் பிரசாத் (13) சூர்யபிரசாத்(11). பள்ளி சென்ற இரு மாணவர்களையும் காணவில்லை என பெற்றோர் புகார். | வகுப்பறை வன்முறை | தினமணி |
| 800. | 13.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை பசுமலையைச் சேர்ந்த முத்துமாரி மனைவி ராஜாத்தி(23). வேலைக்கு சென்ற ராஜாத்தியைக் காணவில்லை என முத்துமாரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 801. | 13.3.2010 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே மண்ணாடிமங்கலத்தைச் சேர்ந்த காத்தமுத்து. அதே பகுதியைச் சேர்ந்த ராமையா. இருவருக்கும் ஏற்பட்ட நிலத்தகராறில் ஆத்திரமடைந்த ராமமையா குடும்பத்தினர் காத்தமுத்து மனைவி பூங்கொடியை அரிவாளால் தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 802. | 13.3.2010 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் அருகே மேலப்பட்டியைச் சேர்ந்த பாதமுத்து மனைவி செல்லபாப்பா(35). தீராத | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்த அவர் விஷம் அருந்தி தற்கொலை. | | |
| 803. | 13.3.2010 | **மதுரை மாவட்டம்:** நாகமலை புதுக்கோட்டை மேட்டுத் தெருவைச் சேர்ந்த கேசவன்(27) மனைவி சுமதி(22) . குடும்ப வறுமையின் காரணமாக கணவன் மனைவி தகராறில் சுமதி தீக்குளித்தார். காப்பாற்ற போன கேசவன் மற்றும் இரு குழந்தைகள் படுகாயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 804. | 13.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** மதுரையைச் சேர்ந்த மாசிலாமணி மகள் கீர்த்திகா காமு. ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே விடுதியில் தங்கி தனியார் கல்லூரியில் படித்து வந்தார். கல்லூரி சென்ற அவரை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |

மக்கள் கண்காணிப்பகம்